[1981 ஏப்ரல் 29

தென்னாற்காடு, தஞ்சை, திருநெல்வேலி மாவட்டங்களில் ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுமனைப் பட்டாக்கள்.

*** வினா எண் 906.—திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) சிதம்பரம் மற்றும் காட்டுமன்னார்குடி தாலுக்காக்களில் 1972-73 முதல் 1979-80 வரை பட்டா வழங்கப்பட்ட நஞ்சை நிலங்களில் அரிசன மக்கள் வீடு கட்ட முடியாத நிலையில் மிகப் பள்ளமாக இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) பள்ளமான இடங்களை மேடாக்குவதற்குத் தேவையான நிதி ஒதுக்கீடு குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

வினா எண் 907.—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) தஞ்சை மற்றும் திருநெல்வேலி ஜில்லாக்களில் 1972-73 முதல் 1979-80 வரை பட்டா வழங்கப்பட்ட நஞ்சை நிலங்களில் அரிசன மக்கள் வீடு கட்ட முடியாத நிலையில் மிகப் பள்ளமாக இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) மற்றும் (ஆ) தஞ்சை மற்றும் திருநெல்வேலி ஜில்லாக்களில் 1972-73 முதல் 1979-80 வரை பட்டா வழங்கப்பட்ட நஞ்சை நிலங்களில் அரிசன மக்கள் வீடுகட்ட முடியாத நிலை பற்றிய விவரங்கள் மாவட்ட ஆட்சியாளர்களிடமிருந்தும் மற்றும் ஆதி திராவிட பழங்குடி மக்கள் நல இயக்குநரிடமிருந்தும் முழுமையாக கிடைக்கப் பெறவில்லை. ஆயினும், பள்ளமாக உள்ள நிலங்களை மேடுபடுத்துவதற்கு ஆகும் செலவை அரசே ஏற்க வேண்டும் என்ற கருத்துரு பரிசீலனையில் உள்ளது. இதுபற்றி விரைவில் முடிவு எடுத்து மேற்கொண்டு நடவடிக்கைகள் தொடரப்படும்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு கேள்விகளுக்கும் அரசு பரிசீலிக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். ஆனால் இந்த ஆதி திராவிட மக்களுக்கு இருக்கக்கூடிய மனைகள் 1972-லே இருந்து இன்னும் ஆயிரக்கணக்கான

இடங்களில் அரிசன நல அதிகாரிகள் சர்வே செய்தும் அவர்களுக்குக் கொடுக்க முடியாமல் இருக்கின்றது. காரணம் ஒன்று அவர்கள் கோவிலுக்குச் சொந்தமான நிலங்களை ஒதுக்குகிறார்கள். அவர்கள் நிலங்களைக் கொடுக்க மறுக்கிறார்கள். அடுத்தது வேறு இடங்களில் ஒதுக்கினால் மிராஸ்தாரர்கள் தலையிட்டு 'ஸ்டே' வாங்கிவிடுகிறார்கள். அதன் காரணமாகத்தான் அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகள் தவிர்க்கமுடியாத மோசமான நிலை வருகிறபோது அந்த ஏழைகளுக்கு இப்படி பள்ளமான இடங்களை ஒதுக்க நேரிடுகிறது. அதனால் அவர்கள் பெரிதும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, ஒரு இடத்தில் அந்த நிலம் தரவேண்டும் என்று அதிகாரிகள் சர்வே செய்து கொடுத்துவிட்டால், அந்த இடத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அந்த ஏழை அரிசன மக்களுக்கு விநியோகம் செய்ய எதிர்காலத்திலே நடவடிக்கை எடுப்பார்களா ? ஸ்டே வாங்கியவர்களுக்கும் விநியோகிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தினை அரசு ஏற்றுக்கொள்கிறது. அது குறித்து அரசு நிச்சயமாகப் பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோவைத்தம்பி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஞ்சை நிலங்களின் மீது, தாழ்த்தப்பட்டவர்களுக்கு வீடுகட்டுவதானாலும் அல்லது ஹவுசிங் போர்டுக்கு ஒதுக்கப்பட்டாலும், என்ன மோகம் அதிகாரிகளுக்கு இருக்கிறது என்பது எனக்குத் தெரியவில்லை. இப்படி ஒதுக்கப்படும்போது, நஞ்சை நிலங்களையும் அல்லது நகரின் மையப்பகுதியில் உள்ள விலைமதிக்க முடியாத இடங்களை ஒதுக்குவதால்தான் 'ஸ்டே' வாங்குகிறார்கள். எனவே அமைச்சர் அவர்கள், தயவுசெய்து தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வேகமாக வீடு கட்டித்தருவதற்காக, விலை குறைவாக உள்ள புஞ்சை நிலங்களைக் கையகப் படுத்த முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, நஞ்சை நிலங்களைக் கையகப்படுத்தக்கூடாது என்றும், மேற்படி நிலங்கள் கையகப் படுத்துவது மிகவும் அவசியம் என்றோ அல்லது தவிர்க்க முடியாதது என்றோ ஐயமறத் தெரிந்த பிறகு, மாவட்ட ஆட்சித் தலைவர் நேரடியாக அந்த இடத்தைப் பார்த்தவுடன், அரசின் முன் அனுமதி பெற்று அந்த நஞ்சை நிலங்களைக் கையகப்படுத்தி வருகின்றோம். ஆகவே இதிலே அரசு கண்ணுங் கருத்துமாக இருக்கின்றது.